# பாட்டு நூல்கள் உணர்த்தும் வணிக மேலாண்மைச் சிந்தனைகள்

**முனைவர் கே. இரா. கமலாமுருகன்,**
**இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**இராணிமேரி கல்லூரி, சென்னை – 4**
**kamalamuruganhari @gmail.com**

19

**ஆய்வுச்சுருக்கம்**

உலகிலேயே பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதாகவேத் தம் வாழ்வியலில் பல்வகையான மேலாண்மை நுட்பங்களையும் தெரிந்து தெளிந்து பயன் கொண்டு வாழ்ந்தவர்கள் தமிழர்கள். இதன் சான்றான செய்திகளையும், வாழ்வியல் முறைகளையும் நாம் சங்க சங்க இலக்கியங்களில் காண இயலுகின்றது.

அவ்வகையில் பத்துப்பாட்டு நூல்களில் காணலாம். வணிக மேலாண்மைச் சிந்தனைகளை எடுத்துரைப்பதாக இவ் ஆய்வு அமைகின்றது.

**ஆய்வு நோக்கம்**

**பாட்டு நூல்களில் வணிக மேலாண்மைச் சிந்தனைகள் எடுத்துரைப்பதன் நோக்கம்**

சங்க இலக்கியங்கள் பாட்டும் தொகையும் என வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பாட்டு நூல்கள் பத்து. அவற்றை ஆற்றுப்படை நூல்கள், அகநூல்கள், புறநூல்கள், அகப்புற நூல்கள் என பகுத்துள்ளனர். அவை முறையே,

**"முருகு பொருநூறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய**
**கோல நெடு நல்வாடை, கோல்குறிஞ்சி பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து"**

என்று பழந்தமிழ்ப்பாடல் சுட்டுகின்றது.

**பாட்டு நூல்களில் வணிக மேலாண்மை நுட்பங்கள்**

பாட்டு நுல்களில் காணலாகும் வணிக மேலாண்மைச் செய்திகளைக் காண்போம்.

**தமிழர்தம் வணிகச் சிறப்பு**

பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதாகவே தமிழர்கள் வணிக மேலாண்மை நுட்பங்கள் உணர்ந்து செயல்படுத்தி வெற்றி கண்டு அதன் மூலமாக பல்வகைச் செல்வங்களையும் அடைந்துள்ளனர்.

**"இன்னிசைப் புணரி கிரங்கும் பௌவத்து**
**நன்கல வெறுக்கைத் துஞ்சும் பந்தர்க்**
**கமழும் தாழைக் கானல் அம் பெருந்துறைத்**

**தண்கடல் படப்பை நல்நாட்டுப் பெருந"** (பதிற்றுப் – 55)

என்ற பாடலடிகளில் ஓசையுடைய கடல் அலைகளில் வழி வந்த கலன்களைப் பாதுகாக்கும் பண்டக சாலையுடைய சேரனைக் காட்சிப்படுத்துகின்றது. கடல்வழி மட்டுமின்றி ஆற்றின் மூலமும் வணிகம் நடைபெற்றமையினை,

**"கன்னிஅம் பேரியாற்று வெய்நுரை கலங்க**

**பவனர் தந்த வினைமானர் நன்கலம்**

**பொன்னோடு வந்து கறியொடு பெயரும்**

**வளம்கெழு முசிறி ஆர்ப்புஎழ வளைஇ"** (நற் – 149)

என்ற பாடலடிகளில் கள்ளி என்னும் பேரியாற்றில் நடைபெற்ற வணிகம் பற்றிய செய்தியானது பதிவு செய்யப்பட்டுள்ளது. முசிறி அருகே கடலிற் கலக்கும் கள்ளி ஆற்றில் வெண்மையான நுரைபெருகும் வகையில் யவனர்களின் மரக்கலனில் பொன்னைக் கொண்டுவந்து விலையாகக் கொடுத்துப் பின் இங்கு விளைந்த மிளகு உள்ளிட்ட பொருள்களை ஏற்றிச் சென்றமையைச் சுட்டுகின்றது.

இவ்வாறு பல்வேறு சிறப்புகளுடன் தமிழர்கள் வணிக மேலாண்மை அறிந்து செயலாற்றியமைமயை அறிய முடிகின்றது.

**பாட்டு நூல்களில் வணிக மேலாண்மை நுட்பங்கள்**

பாட்டு நூல்களில் குறிப்பாக சில இலக்கியங்கள் மிகுதியான வணிக செய்திகளைக் குறித்துப் பேசுகின்றன. வணிகம் என்பது தொழில்துறையும் பொருளாதாத் துறையும் இயைந்த ஒன்று என்பதும் யாவரும் அறிந்தமையே ஆகும். அவ்வகையில் பல்வகைத் தொழில்களான வேளாண்மை, தச்சு, மட்கலம், நெசவு, கொல்லன், உலோகம், தோல், போர் கருவிகள், பல்வகை அணிகலன்கள் என அனைத்துத் தொழில்களிலும் சிறந்தமையினை அறிய முடிகின்றது. நெசவுத் தொழில் சிறப்பினை,

**"கொட்டைக் கரைய பட்டுடை நல்கி"** (பெரு. ஆற் – 155)

என்ற அடியிலும், வேளாண்மை சிறப்பை,

**"பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளி பேகழ்வு**

**வாலிதின் விளைந்தன ஐவனம் வெண்ணெல்"** (மலை. 114 – 115)

என்ற அடிகளும்,

**"சாலி நெல்லின் சிறைகொள் வேலி**

**ஆயிலம் விளையுட்டு ஆக**

**காவிரி புரக்கும் நாடுகிழவோனே"** (பெரும் . ஆற். 246 – 248)

என்ற அடிகள் உள்ளிட்ட இலக்கியங்களிலும் பல்வகை செயல்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர். இதனை ஒட்டியே சிலப்பதிகாரம்,

**"ஆகாரத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்**

**கோவலர் வாழ்க்கை ஓர் கொடும்பாடில்லை"** (அடைக். கா. 120 – 121)

என்று எடுத்துணர்த்துகின்றது.

**வணிகச் செயல்முறை நுட்பங்கள்**

பல்வகையான வணிக முறைகள் பின்பற்றப்பட்டன.

**துலாக்கோல்**

திருவள்ளவர்,

**"சமன் செய்து சீர்தூக்கும்"** (குறள் – 118) என்று துலாக்கோலை சமநீதிக்குரிய சான்றாகச் சுட்டுகின்றார்.

வணிகத்தின் அடிப்படைக் கருவியாக துலாக்கோல் அமைந்ததனையும், அதனை நீதியின் பதிவாகவே மக்கள் பயன் கொண்டனர் என்பதனை அறிய இயலுகின்றது.

பட்டினப்பாலை இவ்வரிய அற மேலாண்மைச் சிந்தனையை,

**"வடுவஞ்சி வாய்மொழிந்து**
**தமவும் பிறவும் ஒப்ப நாடிக்**
**கொள்வதூஉம் மிகை கொளாது**
**கொடுப்பதூஉம் குறை கொடாது**
**பல் பண்டம் பகர்ந்து வீசும்"** (பட். 206 – 211)

என்று உணர்த்துகின்றது. திருக்குறள் மற்றுமொரு பொதுநிலையில்,

**"வணிகம் செய்வோர்க்கு வாணிகம் பேணி**
**பிறவும் தமபோற் செயின்"** (குறள் – 120)

என்று எடுத்துணர்த்துகின்றது.

**இரு வகையான மேலாண்மை**

வணிக முறையில் இரு நிலையில் செயல்பாடுகள் அமைந்தன. 1) உள்நாட்டு வணிகம், 2) அயலக வணிகம் என்பன ஆகும்.

**உள்நாட்டு வணிகமுறை**

வணிக முறையின் செயல்பாடுகள் முதற்கண் அருகருகே நிகழத் தொடங்கின. குறிப்பாக அவை பண்டமாற்று முறையாகவே அமைந்தன.

**"தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்**
**மீன் நெய்யொடு நறவு மறுகம்"** (பொரு.ஆற் – 214) என்றும்

**கொற்கையில் உப்பு வணிகம்**

உப்பை ஏற்றிக்கொண்டு வாணிபத்தினர் தங்கள் மனைவி மக்களுடன் எருமை பூட்டிய வண்டியில் சென்றனர். அந்த வண்டியின் அச்சாரச் சுவட்டின் வழியே குழந்தைகளைப் போன்று குரங்குகளும் தொடர்ந்தன என்பதனை,

**"வீங்குதிரை கொணர்ந்த விரை மரவிடிகின்"** (சிறு . ஆற் – 155)

என்ற பாடலடியும்,

**“நாண்மோர் மாறு நனமா மேனிச்**
**சிறுகுழை துயல்தரும் காதிற்  பணைத்தோட்**
**குறுநெறி கொண்ட கடந்த லாய்மகள்**
**அளவினைக் கட்டிப் பசும்பொன் கொன்றால்**
**எருமை நல்லான் கருநாகு பெறூஉம்“** (பெரும். ஆற். 160)

என்ற பாடலடியும் எடுத்துணர்த்துகின்றன. தொகை நூல்கள் இதற்குச் சான்று பகரும் வகையில்,

**“தம்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி…..”** (நற் – 183) என்றும்,
**“அரிகிளர் பணைத்தோள்……..”** (அகம் – 245) என்றும்,

**“கான் உறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்**
**மான்தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்**
**தயிர் கொடு வந்த தசும்பும் நிறைய**
**ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்**
**குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்**
**முகத்தனர் கொடுப்ப உந்தனர் பெயரும்”** (புறம் – 33)

என்ற பாடல்களும் எடுத்துணர்த்துகின்றன.

இப்படி உள்நாட்டில் பல்வகையான நிலைகளில் பண்டமாற்று முறையில் வளர்ந்த வணிகமுறை சில நாட்களில் கடல்வழியே தம் வணிக மேலாண்மையினை தாய்நாடு கடந்தும் கொண்டு சென்றன.

**அயல்நாட்டு வணிக மேலாண்மை நுட்பங்கள்**

பெரும்பான்மை கடல் போக்குவரத்து மற்றும் சிறுபான்மை தரைப் போக்குவரத்து வாயிலாகவும் தமிழர்தம் வாணிகச் சிறப்பினால் அயலகங்களில் கால் கொண்டனர். தமிழர்களின் மிளகு, பட்டு போன்ற பல முக்கியப் பொருட்கள் பல அயல்நாடுகளில் விறபனைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அவ்வாறே அங்கிருந்து பல சிறந்த பொருள்களும் தமிழகத்தில் விற்பனைக்கு இறக்குமதி செய்யப்பட்டன என்ற செய்திகளை அறிய முடிகின்றது. இதனை,

**“இரும்கழிச் செறுவல் தீம்புளி வெள்ளும்பு**
**பழித் தோங்கும் வரைப்பின் வன்னகத் திமிலர்**
**கொழுமின் குறைஇய துடிக்கண் துணியில்**
**அழுமிய நாவாய் பெருந் நச்சுநர்**

**நனற்தலைதே எத்து நன்கலன் உய்ம்மார்**

**புணர்ந்துடன் கொணர்ந்த பரவியோடு அனைத்தும்**

**வைகல தோறும் வழிவழி சிறப்ப"** (மதுரை – 149) என்பதும்,

**"குமலை பிறந்த ஆரமும் அகிலும்**

**தென்கடல் முத்தும் குணகடல் துகிளும்**

**சுங்கை வாரியும் காவிரிப் பயனும்**

**ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்"** (பட்டின. 187 – 191)

என்றும் எடுத்துரைப்பதுடன் வணிகத்தின் காரணமாக மக்கள் தொடர்பு மற்றும் மொழிப்பகிர்வு போன்ற பல்வகை பண்பாட்டு நாகரீக மாற்றங்களும் உண்டாகிய சூழலை,

**"பல் ஆயமொடு பதிபழகி வேறு வேறு**

**உயர்ந்த முதுவாய் ஒக்கல்**

**சாறு அயர் மூதூர் சென்று தொக்காங்கு**

**மொழிபல பெருகிய பழிதீர் தேயத்துப்**

**புலம்பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்**

**முட்டாச் சிறப்பின் பட்டினம்"** (பட்டின. 213 – 218)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

மேலும் இன்றைய நடைமுறையில் அதீத சட்ட முறைகளுடன் பின்பற்றப்படும் முத்திரைப்பதித்தல், வரிவிதித்தல் போன்ற நடைமுறைச் சட்டங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதாகவே வழக்கில் வந்தமையினை,

**"அளந்தறியாப் பலபண்டம்**

**வரம் பறியாமை வந்தீண்டி**

**அருங்கடிப் பெரும் காப்பின்**

**வியுட்டை வலி அணங்கினோன்**

**புலிபொறித்துப் புறம் போக்கும்"** (பட்டின. 130 – 135)

என்று எடுத்துணர்த்துகின்றது.

வணிகம் செய்யும் கடைத்தெருவுக்கு "ஆவணம்" என்று ஒரு பெயர் உண்டு. பண்டங்களைச் சேகரிக்கும் இடம் "அங்காடி" எனப்பட்டது. இன்று "கிடங்கு" என்று கூறுகிறோம். ஆவணம் அல்லது அங்காடி சில்லறை வணிகம் செய்யும் இடம் என்றும் சுட்டப்பட்டது.

இறக்குமதி பண்டங்களுக்கு முத்திரையிடப்பட்டு, "சுங்கம்" என்ற வரி

வசூலிக்கப்பட்டது. இதற்கெனத் தனித்தனியே ஆட்கள் செயல்படுத்தப்பட்டனர். இங்கு கடுமையான காவலும் நிலவியது. இதனை (பெரும். 80 – 82) உணர்த்துகின்றது. “சுங்கம்” என்பது “உல்கு” என்று சுட்டப்பட்டது. இதனை “இவ்வரியை வாங்கும் ஆய்த்துறைகள் கடற்கரையை ஒட்டி அமைந்திருக்கும்” (பத்து. ஆரா. ப. 72 – 73) என்று சுட்டுகின்றது.

கலங்களை இரவு நேரத்தில் கரை சேர்க்கக் கலங்கரை விளக்கங்கள் அமைக்கப்பட்டதும் தமிழரின் தொழில்நுட்ப அறிவினைப் பறைசாற்றுகின்றன. இதனை பெரும்பாணாற்றுப்படை காட்சிப்படுத்துகின்றது. இதனுடன் நீர் நிலைகளை ஒட்டிய கடற்கரைத் துறை முகத்துக்கான சிறப்புகள் கூடுகின்றன. வணிகர்கள் தெரு, பரதவர் தெரு, பல்தொழில் புரிவோர் வாழும் தெரு என கடற்கரையை ஒட்டி மக்கள் வாழும் பகுதிகளும் அமைந்தன.

**நிறைவுரை**

பண்டைத்தமிழன் ஆளுமையும், அறிவாற்றலும் என்றும் போற்றுதற்குரியன மட்டுமல்ல, பின்பற்றுதற்குரியன. அவ்வகையில் நுட்பமான அறிவாற்றலால் பண்டமாற்று முறையில் துவங்கிய வணிகச் சிறப்பினை உலகின் பல்வேறு நாடுகளுக்கும் கொண்டு சேர்த்து, அங்கிருந்து இறக்குமதிகளையும் செய்து நாட்டின் செல்வ வளத்தையும் கூட்டிய தமிழரின் வணிக மேலாண்மைச் சிறப்புகளை உற்று நோக்கி போற்றித் தொடர்வோம்!

**உதவிய நூல்கள்**


1. அகநானூறு New Century Book House – Chennai
2. சிறுபாணாற்றுப்படை New Century Book House - Chennai
3. திருக்குறள் New Century Book House - Chennai
4. நற்றிணை New Century Book House - Chennai
5. பட்டினப்பாலை New Century Book House - Chennai
6. பதிற்றுப்பத்து New Century Book House - Chennai
7. பத்துப்பாட்டு ஆராய்ச்சி சாரதா பதிப்பகம் - சென்னை
8. புறநானூறு New Century Book House - Chennai
9. பெரும்பாணாற்றுப்படை New Century Book House - Chennai
10. பொருநர் ஆற்றுப்படை New Century Book House - Chennai
11. மதுரைக் காஞ்சி New Century Book House - Chennai
12. மலைபடுகடாம் New Century Book House - Chennai